# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

பதிவ எண்: | | | | | | |

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

(செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், கட்டுரை, கடிதம்)

### பிரிவு - I (மதிப்பெண்கள் : 10)

#### பகுதி - I

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 6×1=6

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எம் + தமிழ் + நா இ) எந்த + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. நறுந்தொகை என அழைக்கப்படும் நூல் .............
   அ) திருக்குறள் ஆ) குறுந்தொகை இ) வெற்றிவேற்கை ஈ) நற்றிணை
3. மலைபடுகடாம் நூலின் மற்றொரு பெயர் .............
   அ) பெரும்பாணாற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை
   இ) கூத்தராற்றுப்படை ஈ) பொருநராற்றுப் படை
4. 'கேட்டவர் மகிழ பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
   அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்
5. 'வீசு தென்றல்' - இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
   இ) வேற்றுமைத் தொகை ஈ) உம்மைத் தொகை
6. மல்லிகைப்பூ என்பதன் பொதுப்பெயர் .............
   அ) மல்லிகை ஆ) பூ இ) மல்லிகைப்பூ ஈ) பூ மல்லிகை

#### பகுதி - II

**பொருத்துக :** 4×1=4

7. கொண்டல் - மேற்கு
8. கோடை - தெற்கு
9. வாடை - கிழக்கு
10. தென்றல் - வடக்கு

### பிரிவு - II (மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** 5×2=10

11. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
12. அமில மழை என்றால் என்ன?
13. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
14. இறடிப்பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
15. பூவின் நிலைகள் யாவை?
16. உயிரளபெடையின் வகைகள் யாவை?
17. விரிச்சி என்றால் என்ன?

## பிரிவு - III (மதிப்பெண்கள் : 12)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 3×4=12

18. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
19. ஹிப்பாலஸ் பருவக்காற்று என்றால் என்ன?
20. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?
21. உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.
23. தாவரங்களின் அடிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களை விளக்குக.

## பிரிவு - IV (மதிப்பெண்கள் : 5)

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு அரைப்பக்க அளவில் விடை தருக:** 1×5=5

24. புயலிலே சிக்கித் தவித்த தோணியைப் பற்றி விவரி. **(அல்லது)**

    வறுமையிலும் விருந்தோம்பும் பண்பினை கோபல்லபுரத்து மக்கள் கதையின் வழியாக விளக்குக.

## பிரிவு - V (மதிப்பெண்கள் : 8)

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்கவும்:** 1×8=8

25. சான்றோர் வளர்த்த தமிழ்
26. உணவு விடுதியில் தரமற்ற உணவு வழங்கப்பட்டதை உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குப் புகார்க்கடிதம் வரைக.

## பிரிவு - VI (மதிப்பெண்கள் : 5)

**செய்யுள் வடிவில் விடை தருக:** 3 + 2 = 5

27. 'அன்னை மொழியே' எனத்தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்.
28. 'முயற்சி' எனத்தொடங்கும் குறள்.

-------